காரணத்தாலும், இன்று அந்தத் தேர்தலை நடத்த முடிய வில்லை. அதற்கான தேர்தல், நாளை மறுநாள், 29-4-1993 அன்று பேரவையின் குழுக்கள் கூடும் அறையில் நடைபெறும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஏற்கனவே இருந்த டைம்—தான். திரு. துரை ராமசாமி.

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 பேர்கள் மனு கொடுக்க வேண்டிய இடத்திலே 4 பேர்கள் கொடுத்துள்ளார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். எந்தந்தக் கட்சியிலே எவ்வளவு பேர்கள் கொடுத்திருக் கிறார்கள் என்பதை நீங்கள் சொல்ல முன்வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இதுபற்றிய குறிப்பை வழக்கமாக, வேட்பாளர்கள் பற்றிய குறிப்பை, உங்களுக்குச் செய்தித்தாள் மூலம்தான் அனுப்புவது வழக்கம். இந்தத் தேர்தல் நாள் இன்று என்று அறிவித்து இருந்த காரணத்தால், இன்று நடத்த முடியாத சூழ்நிலையில் இந்தத் தேர்தலை ஒத்திவைத்த அறிவிப்பைதான் இங்கே உங்களுக்கு நான் கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு நடைபெறவிருந்த அந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு, நாளை மறுநாள், 29ஆம் தேதி காலை 10.30 மணிக்கும், பிற்பகல் 1.30 மணிக்கும் இடையில் குழுக்கள் கூடும் அறையில் நடைபெறும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-4-1993) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.38 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

196. திருவாளர்கள் இந்திய குடும்ப கட்டுப்பாட்டுச் சங்கத்தின் சென்னை கிளை, உபயோகத்திற்காக, எம். எச். 01பி 6901 என்ற பதிவு எண் கொண்ட ஜீப் வாங்குவதற்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5-1-1993 ஆம் நாளிட்ட 2ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

1993 ஏப்ரல் 27]

அறிவிக்கை (1990ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

197. 1988ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் 4—9—1992ஆம் நாளிட்ட 411 எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

198. 1989-90ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

241. 1991-92 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில பொதுத்துறை நிறுவனங்கள் பற்றிய ஆய்வுரை, (ஆங்கிலம்).

242. கோரிக்கை எண் 8—தேர்தல்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

243. கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

244. கோரிக்கை எண் 41—விடுதலைப் போராட்ட வீரர் களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணி யாற்றியவர்களுக்கும் ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

245. கோரிக்கை எண் 42—பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

246. கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).